**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**நாள். 14.10.2025.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**அசல் வழக்கு எண். 86/2024**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் நாள் செவ்வாய்க்கிழமை நீதிமன்ற சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | அப்பாதுரை | வயது | : | 72 |
| ஊர் | : | கூழமந்தல் | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 (லோகநாதன்)-ன் 2ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை:**

**(2ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையையே 1ம் பிரதிவாதி தன் தரப்பு குறுக்கு விசாரரணையாக ஏற்றுக்கொள்கிறார்.)**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியுமா என்றால் சுமாராக தெரியும். நான் எதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பாகத்தை பிரேமா என்பவர் விற்றுவிட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தாத்தா பெயர் என்னவென்றால் ரத்தினகவுண்டர் ஆகும். மேற்படி ரத்தினகவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பேர்கள் ஆவர். அவர்கள் அப்பாதுரை கவுண்டர், கிஷ்டப்ப கவுண்டர், நடேச கவுண்டர் என்று சொன்னால் சரிதான். நான் அப்பாதுரையின் வாரிசு என்றால் சரிதான். கிஷ்டப்ப கவுண்டரின் மகன் வேலாயுதம் என்றால் சரிதான். மேற்சொன்ன வேலாயுதத்தின் மகள்தான் 1ம் பிரதிவாதியான பிரேமா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ஷீலாதேவி என்பவர் என்னுடைய மகள்தான் என்று சொன்னால் சரிதான்.

2. ரத்தினகவுண்டருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றும் அந்த சொத்துக்கள்தான் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் அப்பாதுரையின் சொத்துக்கள்தான் பாகப்பிரிவினை செய்யப்பட்டது. வழக்கு சொத்தானது பூர்வீக சொத்து என்று சொன்னால் சரிதான். அந்த பூர்வீக சொத்தைதான் எனது தகப்பனார் மற்றும் அவரின் சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகம் பிரித்துக்கொண்டதன் அடிப்படையில் என் அப்பா அப்பாதுரைக்கு சுமார் 1 1/2 ஏக்கர் ஆகும். எனது சித்தப்பா கிஷ்டப்ப கவுண்டருக்கு எவ்வளவு சொத்துக்கள் வரப்பெற்றது என்றால் அதே அளவு சொத்துக்கள்தான் அவருக்கும் கொடுக்கப்பட்டது. மேற்படி என் அப்பா அப்பாதுரை

பெற்ற சொத்துக்கு பட்டா பெற்றாரா என்றால் இல்லை. மேற்படி என் அப்பாவிற்கு வந்த சொத்திற்கு என் பெயரில் தற்போது பட்டா எண் 240 உள்ளது என்று சொன்னால் சரிதான்.

3. வேலாயுதம் பேரில் உள்ள பட்டா எண் 267ல் உள்ள 16 சென்ட் சொத்தைதான் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் பழைய சர்வே 152/5ஏ என்று சொன்னால் சரிதான். அதனின் மொத்த விஸ்தீரணம் 28 சென்ட் என்று சொன்னால் சரிதான். அந்த 28 சென்ட்டும் 1ம் பிரதிவாதியின் தந்தையான வேலாயுதம் பேரில்தான் பட்டா இருந்தது என்று சொன்னால் சரிதான். வேலாயுதம் பெயரில் இருந்த பட்டா தான் 267 என்று சொன்னால் சரிதான். அப்பாதுரையும், கிஷ்டப்ப கவுண்டரும் கூட்டாக வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்பதற்கு அ பதிவேடு, சிட்டா ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நானும் வேலாயுதமும் கூட்டாக சொத்தை அனுபவித்து வந்ததற்கான அ பதிவேடு, சிட்டா ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. நான் வேலாயுதம் பெயரில் உள்ள 28 சென்ட்டில் 16 சென்ட்டை 30.01.1996 அன்று கிரயம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணமானது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1996 அன்று பெறப்பட்ட சொத்திற்கு பட்டா மாற்றம் செய்தேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றபிறகுதான் நான் தாக்கல் செய்திருக்கும் வாதசாஆ.1 ஆன கூட்டுப்பட்டா பெறப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகுதான் மேற்படி பட்டாவினை உட்பிரிவு செய்வதற்காக வருவாய்த்துறையில் முறையிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் 16 சென்ட் சொத்தை பெற்றதற்கான சர்வே எண் 152/5ஏ2 என்று சொன்னால் சரிதான். அந்த பட்டா தான் வாதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 152/5ஏ1 ஆனது வேலாயுதம் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

5. சர்வே எண் 152/5ஏ ல் உள்ள 28 சென்ட் சொத்திற்கான ஜக்பந்தி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்தின் தெற்கில் என்னுடைய நிலம் இருக்கிறது என்றால் சரிதான். அதேபோல் வடக்கில் கணேசன் என்பரின் நிலமும், கிழக்கில் கோயில் குட்டை என்றும், மேற்கில் கோபால் என்பவரின் நிலம் உள்ளது என்றும் சொன்னால் சரிதான். வாதசாஆ.2ன்படி வேலாயுதம் என்பவர் தன்னுடைய பெயரில் இருந்த 28 சென்ட் சொத்தில்தான் 16 சென்ட் எனக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி 28 சென்ட் சொத்தானது முதலில் கிஷ்டப்ப பெயரில் வந்து பிறகு வேலாயுதம் பெயரில் வந்த சொத்தில் 16 சென்ட்டைதான் நான் கிரயம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான்.

6. மேற்படி வேலாயுதம் என்பவர் 16 சென்ட்டை மட்டும்தான் எனக்கு விற்பனை செய்தார் என்றும், மீதமுள்ள 12 சென்ட்டானது வேலாயுதத்திற்குத்தான் சொந்தமானது என்று சொன்னால் அந்த 12 சென்ட்டும் எனக்கு சொந்தமானதுதான். மேற்படி 12 சென்ட் சொத்தானது வேலாயுத்தின் மறைவிற்கு பிறகு அவருடைய மகளான 1ம் பிரதிவாதி பிரேமா என்பவர் 2ம் பிரதிவாதியான என்னுடைய மகளான ஜீலா தேவிக்கு விற்பனை செய்தார் என்று சொன்னால்

சரியல்ல. அந்த சொத்தானது என்னுடைய சொத்தாகும். மேற்படி 12 செண்ட் சொத்தை பிரேமாவிடமிருந்து பெற்று ஷீலா தேவிதான் இந்நாள் வரை ஆண்டு அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகள் 2ம் பிரதிவாதியானவர் எங்களுடைய பூர்வீக சொத்தில் பாகம் கேட்டாரா என்றால் பாகம் கேட்கவில்லை.

7. மேற்படி 2ம் பிரதிவாதியானவர் பூர்வீக சொத்தில் பங்கு கோரி மாண்பமை செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 85/2025 தாக்கல் செய்துள்ள விவரம் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி பாகம் கோரியதால்தான் இந்த வழக்கை நான் வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் வழக்கு சொத்தில் நான் என்னாலும் அனுபவித்தது இல்லை என்று சொன்னாலும் 2ம் பிரதிவாதிதான் இந்நாள் வரை அனுபவித்து வருகிறார் என்றாலும் அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கு ஜக்பந்தி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வேண்டுமென்றேதான் ஜக்பந்தி குறிப்பிடாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.10.14 18:21:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு